


# வெளியிடை பொழுதுகள்

ம. கிருஷ்ணகுமார்

# வெளியிடை பொழுதுகள்

ம. கிருஷ்ணகுமார்

Title : Veliyidai Pozhuthugal

Author: M.Krishnakumar

Copyright © 2023 M.Krishnakumar

All rights reserved, including the right of reproduction

in whole or in part in any form

Publisher : Self Publish

Address: Konathu, Perukavu P.O.,

Thiruvananthapuram – 695573

Email: m_krishna34@hotmail.com

Front & Back Cover: M. Krishnakumar

Printer : ebook

ISBN : 978-93-5980-330-2

9 789359 803302

## நூலுரை

இது என் இரண்டாவது கவிதை நூலாகும். ‘காற்று வெளியிடைக் கண்ணம்மா’ என்று வெளியிடையை நமக்கு பிரபலப்படுத்திச் சென்றவர் மகாகவி பாரதி. வெளியிடைப் பொழுதுகள் என்ற இந்த கவிதை நூலில் ஐந்து வெளியிடைகளாக கவிதைகள் தொகுக்கப்பட்டிருன்கின்றன. ‘இருள் வெளியிடை’ என்ற தலைப்பில் பிரபஞ்சம் குறித்த மூன்று கவிதைகள் உள்ளன. ‘உலா வெளியிடை’ என்ற தலைப்பில் பயணம் மற்றும் இயல் வாழ்வியல் குறித்த ஒன்பது கவிதைகள் உள்ளன. ‘சமூக வெளியிடை’ என்ற தலைப்பில் சமூகத்தை பற்றிய ஏழு கவிதைகள் உள்ளன. ‘தத்துவ வெளியிடை’ என்ற தலைப்பில் தத்துவ சிந்தையில் தோன்றிய நான்கு கவிதைகள் உள்ளன. ‘நேச வெளியிடை’ என்ற தலைப்பில் நேசம் குறித்த நான்கு கவிதைகள் உள்ளன. இக்கவிதைகள் எழுத உதவிய அத்தனை பேருக்கும் நன்றி. இந்நூலில் எழுத்துப்பிழைகள் இருப்பின் மன்னிக்க வேண்டுகிறேன்.

ம. கிருஷ்ணகுமார்,
திருவனந்தபுரம்.
செப்டம்பர், 2023.

This page is left blank intentionally…

# பொருளடக்கம்


## இருள் வெளியிடை

*இருள் வெளியிடை*

*இருளின்றி அமையாது அருள்*

*அருவமாகிய உரு*

## உலா வெளியிடை

*தெரு உலா*

*பார்வையிழந்த பயணங்கள்*

*தொடுதிரை மௌனங்கள்*

*இரயில் பயணங்களில்*

*வழி மாறிய வண்ணத்துப்பூச்சி*

*நாள் நதி*

*சில்லறை அனுபவங்கள்*

*மழலை வாழ் வீடு*

*யாசகம்*

## சமூக வெளியிடை

*நதியின் விதி*

*மேய்ப்பனாகிய மாடுகள்*

*மது மயக்கும் தொழில் நகரம்*

*ஏதுமில்லாபெருவாழ்வு*

*காவல் தெய்வம்*

*கனவுகள் விற்கும் கம்யூனிசம்*

*கல்லாகிய பகுத்தறிவு*

**தத்துவ வெளியிடை**

*முதலாகிய முதல்*

*நானாகிய நீங்கள்*

*ஒரு சனிக்கிழமை இரவு*

*ஒரு கோப்பை ஓட்டுனர்*

**நேச வெளியிடை**

*மழை வெளியிடை*

*மௌனம் பேசும் மனம்*

*விழியிரண்டால்*

*மொழிப் பிரள்ச்சி*

# இருள் வெளியிடை

# இருள் வெளியிடை

ஒளி ஊடுருவ முடியாத எல்லையில்
இருள் ஆரம்பிக்கிறது...

ஒளியே இருளை விலக்குகிறது...
இருள் ஒரு போதும்
ஒளியை விலக்குவதில்லை...

இருள் வியாபித்திருக்கும்
இப்பிரபஞ்சத்தில்
ஆங்காங்கே ஒளிக் கூட்டங்களாய்
சிதறிக்கிடக்கின்றன
பால்வெளிகளும், நட்சத்திரங்களும்....

ஒளியில்லா இடைவெளியில்
ஆங்காங்கே
ஒளிந்திருக்கிறது கருந்துளைகள்...

இருள் இல்லையேல் ஒளி ஏது...?!
யார் பற்ற வைத்தது
சூரியனையும், நட்சத்திரங்களையும்...!?!

நிழல் ஒரு வகை இருள் எனில்,
இப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும்
இருள்
யாருடைய நிழலாக இருக்கும்...!?!

மிகக்குறைந்த ஒளியென்று இருளையோ,
மிகக்குறைந்த இருளென்று ஒளியையோ,
கூறுவதற்கில்லை....!

நிழல் இருளாகுமா...?!
இருள் நிழலாகுமா..?!

எங்கு முடிகிறது
இப்பிரபஞ்சத்தின் இருள்..!?!
என்ன இருக்கிறது
அந்த இருளின் எல்லையில் ..!?!

இப்பிரபஞ்சம் முழுதும் இருப்பது
ஒரு இருள் தான்..
அவ்விருள் அகற்ற முயல்கின்றன
ஒளிக்கூட்டங்கள்....

ஒளி ஏனோ அறிந்திருக்கவில்லை
இருளால் தான்
தன் இருப்பு என்று ....

இருள் தன்னுள் எல்லாவற்றையும்
சமமாக்கி வைக்கிறது ...

ஒளி தன்வெளியில் எல்லாவற்றையும்
வேறுபடுத்தி காண்பிக்கிறது ....

------------

## இருளின்றி அமையாது அருள்...

இருள் வியாபித்திருக்கும்
வெளியெங்கும்
எங்கோ ஒரு தொலைதூரத்தில்
தன் இருப்பை
வெளிப்படுத்திக்கொள்ளத் துடிக்கிறது
ஒரு சிறு வெளிச்சப் புள்ளி...

சில மணித்துளிகள் முதல்
பல்லாயிரம் கோடி ஆண்டுகள் வரை
ஆயுள் கொண்ட வெளிச்சப்புள்ளிகள்
தங்கள் ஆயுள் முழுதும்
இருள் அகற்றப் முனைகின்றன...

யாரேனும் அறிவாரோ
பேரண்டம் முழுதும் அடர்ந்திருக்கும்
இருளின் ஆயுளை...?!

பேரண்டத்தின் முடிவுறா இருளில்
பிரபஞ்சத்தைக்
கடத்திக்கொண்டிருக்கின்றன
கடவுளின் துகள்கள் ....

இருளே இங்கு நிதர்சனம்...
இருள் அகற்ற முயற்சிப்பதே
அருள் (அஇருள்)...!

இருள் வியாபித்திருக்கும்
இந்த பேரண்டத்தில்
கோடிக்கணக்கான விண்மீன்கள்
அவற்றின் பால்வெளிகளிலும்
இருள் அகற்றப் போராடுகின்றன..

ஒளி ஊடுருவும் இடங்கள்
எதையேனும் வெளிப்படுத்துகிறதா..?!

இருள் அகற்றப் போராடும்
ஒளிக்கணைகள் தோற்கும் பொழுதில்
உயிர்ப்பெறுகின்றன
கருந் துளைகள் ....

இருளின்றி அமையாது அருள்... !

-------------

## அருவமாகிய உரு

பேரண்டத்தின் வெளியெங்கும்
நிறைந்திருக்கின்றன
கோடானு கோடி
உருவங்கள் .....

எது உருவாக்கியிருக்கக் கூடும்
உருவங்களை...?!
உருவமில்லா ஒன்றா.....?

மனிதக் கண்ணின்
கருவிழி வலையில்
அகப்படாததால் உருவம்
அருவம் என்றாகிவிடுமோ .....?!

அணுவும் உருவம் தான்....
அண்டமும் உருவம் தான் ....
உருவமில்லா ஒன்று
உருவத்தை உருவாக்கியிருந்தால்
உருவமுடைய ஒன்று
அருவத்தை உருவாக்கமுடியுமா...?!

உரு என்றொன்று இருந்தால் தானே
உருவாக்கம் என்றொன்று இருக்கமுடியும் ....?!

உரு என்றொன்று இருந்தால் தானே
அருவத்தை முன்மொழிய முடியும்......?!

உரு என்றொன்று இருந்தால் தானே
அருவம் என்றொரு கூற்றை உருவாக்கமுடியும்....?!

அருவங்கள் மட்டும் நிரம்பி வழியும்
வெளியிருந்தால்
எது அந்த அருவங்களை அங்கீகரிக்கும் ...?!

கண்ணின் காட்சிப்பிரள்
ஆறாம் அறிவின் சிந்தனைப் பிரள்
உருவாக்கியவையே அருவங்கள் ....

மிருகங்கள் எவையேனும்
அருவத்தை முன் மொழிகின்றனவா....?!

ஆறாம் அறிவின் உருவங்களே
அருவத்தை முன்மொழிகின்றன .....
அருவங்கள் உருவத்தை
முன் மொழிய முடியுமா....?!

இங்கு அருவங்கள் வெறும்
உருவகங்களே .....
ஆயினும் உருவகம் செய்வதிற்கும் ஒரு
உருவம் தேவை....

யாது? யார்?
எது? எவன்?
என்பவை எல்லாம்
ஏதோ ஒரு உருவத்தின்
பிரதிபலிப்பு தானே ....?!

உணர்விற்கும் உணர்ச்சிக்கும்
உருவம் இல்லையென்று
முன்மொழிந்தால்
உடல் எனும் உருவம்
இருந்தால் தானே
இவை உருப்பெறும் .....

அருவத்திற்கான
ஒரு விளிச்சொல்
ஒன்றை யாரேனும் கூறுங்களே ....

உருவம் உடையவைதான்
ஒலியும்... ஒளியும் ....
அவைகளை ஒழிக்கும் முயற்சியில்
மனித உருவங்கள் .....!

உருவம் இருந்தால் தானே
உயிரினம் ......
எது உருவாகியிருக்கக் கூடும்
அருவங்களை ..?!

எதன் எல்லையில் அருவங்கள்
உருப்பெறுகின்றன ....?!
உருவத்தின் எல்லையில்
உலவிக்கொண்டு
அருவத்தை ஆதரிப்பது
எந்த வகை..?!

உருவங்கள் உலா வரும் வெளியிடையில்
அருவத்தின் தேர் உலா வருமோ ..?!

ஒரு நுண் நோக்கியுன் பார்வையில்
ஒளிந்திருக்கின்றன
கோடானு கோடி உருவங்கள் ....

ஒரு தொலை நோக்கியின் பார்வையில்
அகப்படாமல் இருக்கின்றன
கோடானு கோடி உருவங்கள் ....

அருவத்தின் ஆதி எதுவென்று
யாரேனும் கூறமுடியுமா ....?!

காலத்தைக் கடத்திச் செல்வது
கடவுளின் துகள் எனில்
அத்துகளும் உருவின் உருவமே ....

இங்கு உருவமே பிரதானம்
நாம் உருவமாக உள்ள வரையில் ....

உருவின்றி அமையாது உலகு....
உருவின்றி அமையாது பிரபஞ்சம் ...
உருவின்றி அமையாது பேரண்டம் ....

------------

# உலா வெளியிடை

# தெரு உலா

ஏதோ ஒரு நாளில்,
பின்னிரவின் இருளில்
தாமதாய் வீடு திரும்ப நேர்கையில்
தனியே கடந்து செல்ல நேரிடுகிறது
யாருமில்லா
ஒரு நீண்ட தெருவின்
நீளமெங்கும்....

சோடியம் விளக்குகள்
தெருவெங்கும்
மஞ்சள் போர்வை போர்த்திருந்தது ....

அன்றைய தினத்தின்
நடப்புகள் எல்லாம்
கண்டு களித்து, உள்வாங்கி
அமைதியாய்
ஏதும் அறியா குழந்தை போல்
இரவின் மடியில்
உறங்கிக்கொண்டிருந்தது
அந்த தெரு.....

உறக்கக் கலக்கத்துடன்
கவனமுடம் கடந்து செல்கிறேன்
அத்தெருவின் உறக்கம் கலைக்காத
காலடி ஓசையுடன்.....

அதேபோல்
பின்னம் ஒருநாள்....
அதிகாலையில் சீக்கிரமாய்
வெளியே கிளம்ப நேர்கையில்
தனியே கடந்து செல்ல நேரிடுகிறது
பறவைகள் கீச்சிடும்
அந்த நீண்ட தெருவின் நீளமெங்கும் ....

அச் சப்தங்களின் ஊடே
உறக்கம் தெளிந்தவனாய்
உற்சாகத்துடன்
கடந்து செல்கிறேன் நான்,
அத்தெருவை பள்ளியெழுப்பும்
காலடி ஓசையுடன் .....!
தெருக்கள் எல்லாம் தம்முள்
ஒழித்து வைத்துகொண்டிருக்கின்றன
தம்மில் உலாவும்
மனிதர்களின் ரகசியங்களை ....!

------------

## பார்வையிழந்த பயணங்கள்

அதிகாலை ஆரம்பித்து,
நாள் முழுதும் நீளும்
ஒரு கோடைகால
சன்னலோர பேருந்துப் பயணம்
அத்தனை சுவாரஸ்யம் நிறைந்தது.....

சூரியனின் கூடே,
வழியெங்கும்
சாலையோர மரங்களினூடே,
அடர்ந்த காடுகளினூடே,
பசுமை வயல்வெளிகளினூடே,
வறண்ட தரிசு நிலங்களினூடே,
பயணிக்கும் பேருந்து,
ஊர்களின் ஊடே
கடந்து செல்கையில்
உணர்வுகள் ஊற்றெடுக்கும்
மனதினில்.....

கடந்து செல்லும் ஒவ்வோர் ஊரும்
கொண்டிருக்கும்
தனக்கென ஒரு முகம்....
தனக்கென ஒரு வாசம்...
தனக்கென ஒரு குணம்...

சில ஊர்கள் நினைவூட்டும்,
கடந்து போன நம் பால்யத்தை...
கூடாது போன நம் காதலை ...
கூடிக்களித்த நம் நட்பை ....
மறந்து போன நம் பழைமைகளை...

சில நேரங்களில்,
இரயில் பாதைக் கடக்க நேரிடும்
காத்திருப்பில் விற்கப்படும்
வெள்ளரிகளும், பலாக்களும்,
கொய்யாக்களும், திராட்சைகளும்,
சப்போட்டக்களும்
சுவை கூட்டும்
நம் பயணத்தை....

இரயில் பயணத்தின் சுவாரஸ்யம்
கூடவே பயணிக்கும் சக பயணிகள் ...
பேருந்து பயணத்தின் சுவாரஸ்யம்
கடந்து போகும் ஊர்கள்....

எல்லாம் கடந்து மாலையில்
பயணம் முடிகையில்
கண்ட காட்சிகளும்,
கொண்ட உணர்வுகளும்
அள்ளிக் கொடுக்கும்
ஒரு நல்ல புத்தகம் வாசித்த
அனுபவத்தை .....

மரங்கள் ஏதுமில்லா
நாற்கரச்சாலைகள் வந்தபின்
புறநகர்ச் சாலை வழியே
பயணிக்கும் பேருந்தின்
விரைவுப் பயணம்
அத்தனையாய் கொடுப்பதில்லை
சுவாரஸ்யங்களும், சுவைகளும்...

அலைபேசிகளுடன்
அடிமைப்பட்டு
அடைந்து கிடக்கும்
பயணிகளின் பார்வைகள்
புறக்கணிக்கின்றன
கடந்து போகும் காடுகளை
வயல்வெளிகளை,
தரிசு நிலங்களை,
ஊர்களை.....

புறநகர் வழிச்சாலை கொண்ட
ஊர்களெல்லாம்
இழந்து கொண்டிருக்கின்றன...
தங்களுக்கென்றுள்ள
முகங்களையும்,
வாசங்களையும்,
குணங்களையும்
நினைவுகளையும் .....!

--------------

## தொடுதிரை மௌனங்கள்

இரவின் பேரமைதியை
கிழித்துச் செல்லும் இரயிலினுள்
பயணிகளின் வாய்சொற்களின்
பேரிரைச்சலை உறிஞ்சிக்கொண்டிருந்தன
தொடுதிரை அலைபேசிகள் ...

முனைந்த கவிதை எழுத
பேனாவும் காகிதமும்
தேட மடித்துப் போய்
உறங்குகையில்
உறக்கத்தில் உயிர்த்தெழுந்த
கனவினுள்
மங்கி மாய்ந்து போனது கவிதை .....!

வழக்கம் போல்
இரயில் தன் நிலையத்தில்
உறங்கப்போகும் பொழுதில்
உயிர்த்தெழுந்த  பயணிகளின்
உலாவலில்

அதுவரை தாம் உறிஞ்சி வைத்திருந்த
பயணிகளின் வாய் சொற்களின்
பேரிரைச்சலை
ஊதிப் புறந்தள்ளி
சிறிது நேரம் உறங்கப் போயின
தொடுதிரை அலைபேசிகள் ........

--------------

## இரயில் பயணங்களில்

ஒரு ரயிலின் வருகையின்
சுவாரஸ்யம் போலிருப்பதில்லை
ஒரு பேருந்தின் வருகையோ அல்லது
ஒரு விமானத்தின் வருகையோ ...?!

பயணத்தின் அனுபவம் என்பதின்
உள்ளார்ந்த அர்த்தம்
புதைந்திருக்கிறது
இரயில் பயணங்களில் ....

நீண்டு கிடக்கும் ரயில் பெட்டிகள்
ஒவ்வொன்றும்
தம்முள் புதைத்து வைத்திருக்கின்றன
ஏதோ ஒரு
புதிய நட்புகளின்,
புதிய நேசங்களின்,
புதிய கதைகளின்,
புதிய கவிதைகளின்,
ஆணி வேர்களை ...!

---------------

## வழி மாறிய வண்ணத்துப்பூச்சி

மலைச்சாரலின்
மாயும் வனத்தின் உள்ளிருந்து
எங்கிருந்தோ தன் புழுக் கூட்டினிலிருந்து
வெளியேறிய வண்ணத்துப்பூச்சி
தான் பறந்து செல்லும் வெளியெங்கும்
வர்ணமடித்துச் சென்றது.....

காற்றின் திசையில்
வழி மாறிய
வண்ணத்துப்பூச்சி
எதிர்பட்ட வாழ்விடங்களில்
எதிர்பட்ட மனிதர்களின்
பார்வைகளிலும் மனங்களிலும்
எல்லாம் தன் வர்ணங்களை
அள்ளித் தெளித்துச் சென்றது....

பாட மூட்டைச் சுமையுடன்
பள்ளி செல்லும் மாணவர்களுடன்
பாடிக் களித்து கடந்து சென்றது...

சாலையோரக் குடும்பங்களின்
சோகங்களை
கொஞ்சம் நேரம் அவர்களிடமிருந்து
கொள்ளையடித்துச் சென்றது ......

சாலையின் நீளமெங்கும்
கட்டப்பட்டிருந்த
கட்சி பதாகைகளின் பல வர்ணங்களில்
திகைத்து பாதையறியாமல்
திக்கு முக்காடியது....

போக்குவரத்து நெரிசலில்
வாகனங்கள் சுவாசித்து
வெளியேற்றிய புகை மண்டலத்தில்
மூச்சு விட முடியாமல் திண்டாடியது ....

பிரதான சாலையின்
ஒரு திருப்பத்தில்
சாலை சிவப்பு விளக்கில்
நில்லாமல் வந்த வாகனமொன்றில்,

சில தினங்கள் மட்டுமே
ஆயுள் கொண்ட
அந்த வண்ணத்துப்பூச்சி
தன் வர்ணங்கள் முழுதும்
தீரும் முன்
அடிபட்டு இறந்து போனது
அரை நாளில் ......

--------------------

## நாள் நதி

ஒளி வெள்ளம்
கரை புரண்டோடும்
நீண்டு படர்ந்து விரிந்து கிடக்கும்
பகல் நதியை,
மஞ்சள் ஆடைக் கழைந்து
காலைக் கரையில் இருந்து
நீந்திக் கடக்க விழையும்
சூரியன்...

நண்பகல் பாதி நாள் நதி
கடந்திருக்கையில்
வெயில் உச்சமாயிருந்தது...!

ஆங்காங்கே மேக அலைகள்
வான் நதி எங்கும் அலைந்து கொண்டிருந்தன...
பறவை மீன்கள்
ஆங்காங்கே கடந்து சென்றன....!

நாளெல்லாம் நீந்தி
நாள் நதியின்
மாலைக்கரையில்
கதிரவன் கரையேறுகையில்
அதன் கைக்கதிர்கள்
சிவந்து போயிருந்தது....!

கரையேறிய கதிரவன்
இருள் ஆடை
உடுத்தி உறங்கப் போயிற்று,
மாலைக்கரையில்
இரவு நதி கடக்க
காத்திருக்கும் சந்திரனுக்கு
வந்தனம் சொல்லி....!

------------

## சில்லறை அனுபவங்கள்

ஒரு விடுமுறை நாளின்
ஒரு பகல் பொழுதின்
ஒரு பேருந்தின்
சன்னலோர இருக்கையின்
ஒரு நீண்ட பயணத்தின்
சுவாரஸ்யத்தை முழுதும்
அபகரித்துக் கொண்டு விடுகிறது,
நடத்துனர்
பிறகு தருவதாகச் சொன்ன
மீதி பாக்கி சில்லறை....

------------

## மழலை வாழ் வீடு

வீட்டின் வரவேற்பறையெங்கும்
நிறைந்து சிதறிக் கிடந்தன
விளையாட்டு பொம்மைகளும்
கடவுள் பொம்மைகளும்....

நேர்த்தியாய் வீடு இருக்க வேண்டுமென்றோ
இருந்த பொருள் இருந்த இடத்தில்
வைக்கவேண்டுமென்றோ
நியதிகள் ஏதுமில்லை
ஒரு மழலை வாழ் வீட்டில் ...

விளையாடிக் களைத்து
வரவேற்பறையில்
அயர்ந்து உறங்கியிருந்தது
மழலை.....
கூடவே உறங்கியிருந்தன
வீட்டின் நியதிகளும்,
விளையாட்டு பொம்மைகளும்,
கடவுள்களும்,
அன்றைய பொழுதும்,
அம்மழலையின் மடியில் ....

-----------

## யாசகம்

நெரிசல் மிக்க ரயில் வண்டியில்
முண்டியடித்து
யாசகம் செய்கிறாள் ...
கையில் கைக்குழந்தையுடன்
சோகம் தரித்த முகத்துடன்
ஒரு யாசகி .............

உண்மையென்றோ,
பொய்யென்றோ,
குழந்தை அவளுடையதோ அல்லது
யாசகத்தின் கைப்பொருளோ
என்றறிய முடியா
முகத் தோற்றத்துடன் ...

யாசகத்தின் மெய்த்துவம்
யோசித்திருந்த நான்
தயக்கத்துடன் நின்றிருந்தேன்
யாசகமிட....

விழித்திருந்த குழந்தை
சுற்றும் முற்றும் பார்த்திருந்தது....
இடம் பொருள் ஏவல் அறியா
குழந்தைக்கு
காட்டத் தெரியவில்லை
ஒரு சோக முகம் ...

ஒரு கணப் பொழுதில்
யாசகத்தின் சம்பந்தம்
தனக்கேதும் இல்லையென்பது போல்
பளிச்சென்று விழி திறந்து
அழகாய் ஒரு புன்னகை உதிர்த்து
அக்குழந்தை...

அக்கணப் பொழுதில்
தெய்வ தரிசனம்  ஒன்றை
எனக்கு யாசகம் இட்டுச் சென்றது
அக்குழந்தை  ...

----------------

# சமூக வெளியிடை

## நதியின் விதி

ஒரு நதியின் விதி இவ்வாறு
எழுதப்பட்டிருந்தது.....

நீரெல்லாம் வற்றி
அது ஒரு மணல் பாம்பாகக்
கடவது என்றும்....
அதன் மணல் உதிரம்
மனித அட்டைகள்
உறிஞ்சக் கடவது என்றும்.....

நீரற்று உயிரற்று கிடந்தது
நீண்ட ஒரு மணல் பாம்பு போல
அந்நதி ...

சாரை சாரையாய் படையெடுத்து
அதன் மணல் உதிரம்
மெல்ல மெல்ல உறிஞ்சிச் செல்கின்றன
பெரு வாகனம் கொண்ட
மனித அட்டைப் பூச்சிகள் .....

உதிரம் உறிஞ்சப்படும் நதி
குற்றுயிராய்
வானின் வெண் மேகங்களை
ஏக்கத்துடன் பார்க்கிறது
அவை மழை பொழியாதோ என்று....

அகண்ட அந்நதி
விதி வழியே தன் வாழ்விழந்து
ஒரு வீதி போல் சுருங்கியிருந்தது...
தன் இரு கரையெங்கும்
கட்டிடக் கரையான்களின்
ஆக்கிரம
அக்கிரமத்தால்.....

நதியின் விதி இவ்வாறு
எழுதப்பட்டிருந்தது.....
வெண்மேகம் மழை பொழிந்தால்
அது மீண்டும்
நதியாகக் கடவது  என்று...

வானில் போகும்
வெண்மேகமெல்லாம்
எப்போது மழை பொழியுமென்று
காத்திருக்கிறது
நீரற்று மாய்ந்து போன அந்நதி....

ஏனோ அந்நதி
அறிந்திருக்கவில்லை
வெண் மேகங்கள்
மழை பொழிவதில்லை என்று ....

------------

## மேய்ப்பனாகிய மாடுகள்

பரந்து விரிந்த பசும் புல் வெளி
கண்டிராத மாடுகள் சுற்றித்திரிகின்றன,
கான்க்ரீட் மரங்கள்
அடர்ந்து கிடக்கும்
நகரக் காடுகளில்....!

நகரக் காடெங்கும்
நிறைந்து குவிந்து கிடக்கிறது
கான்க்ரீட் மரங்கள்
உதிர்த்த குப்பை இலைகள்....!

குப்பைகள் சிதறிக்கிடக்கும்
தெரு வெளிகளில்,
பேப்பரும், பிளாஸ்டிக்கும்
புசித்துத் திரிகின்றன,
போன தலைமுறையில்
மேய்ச்சல் மைதான புல் புசித்து
அசை போட்டு வளர்ந்த மாடுகள் இனம்....

பசுமை நிறம் இழந்து
பச்சை மணமற்றுப் போயிருந்தது
மாடுகளிட்ட சாணங்கள்..!

சாலைவிதிகளின் கவலையின்றி
மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலில்
ஆரவாரமின்றி அமைதியாய்
நகர்வலம் போகின்றன
மாநகர மாடுகள்....!

சூரியன் ஊடுறுவும் நகர வெளிகளில்
மேய்ப்பனில்லா மாடுகள்
மேய்ந்து கொண்டிருக்கின்றன....!
இடையில், தாம் வாழும் நகரம்
மாசு படுத்தி
மனிதம் இழந்து
எதிர்கால கனவுகளின் இரை தேடி
மேய்ந்து கொண்டிருக்கிருக்கும்
மனிதர்கள்...!

நகரத்தினூடே நின்றிருக்கும்
ஏதோ ஒரு பிழைத் தருணத்தில்
வெட்டப்படாமல் விட்டுப்போன
ஏதோ ஒரு மர நிழலில்
அமர்ந்து அசை போட்டுக்கொண்டிருக்கும்
இத் தலைமுறை மாடுகள்,
மேய்த்துக்கொண்டிருந்தன
மாநகரத்தின் மாமனிதர்களை....!

-----------------

## மது மயக்கும் தொழில் நகரம்

தெருவெங்கும் மது ஆறு ஓடும்
தொழில் நகரம் அது...

இரவு பகல் இடைவிடாது
உழைத்து உருவாக்கிய
செல்வமெல்லாம் நனைந்திருந்தது
மது ஊழி....

மாநகரின் பிரவாகம் எங்கும்
மது வெள்ளத்தில் தத்தளிக்கும்
மாநகரத்தின் வெளியெங்கும்
மது வாடை...

கருவாகிய நாள் முதல்
மது நெடி சுவாசித்தே
பிறப்பெய்தும் குழந்தைகள்...

மது அருந்தவே
கூடுதல் நேரம் வேலை பார்க்கும்
தொழிலாளர் கூட்டம் ....

ஆடை ஏற்றுமதி தொழில் செய்யும்
தொழிலாளர்
தம்  உயிர் ஏற்றுமதிக்கும்
கருத்தாய் உழைக்கின்றனர்
நாளும் பொழுதும் .....

ஆள் பாதி ஆடை பாதி
என்பது மாறிப்போய்
குடி பாதி ஆயுள் பாதி
என்றாகிவிட்டது ....

தெருவெங்கும் மது ஆறு ஓடும்
தொழில் நகரத்தின் நடுவே
ஊடறுத்துச் செல்லும்
கழிவு நீர் வெள்ளம்
கரை புரண்டோடும்
நொய்ந்து போன
நொய்யலாறு ....

---------------

# ஏதுமில்லாபெருவாழ்வு

பொருளாதாரம் என்பது  இப்போது
பொருட்கள் அதிகாரம்
என்றாகிவிட்டது.....!
இன்றைய வாழ்வின் தரம்
பொருட்களின் எண்ணிக்கையில்
என்றாகிவிட்டது....!

ஊர் கூடி, ஊர் சுற்றி விற்ற
பொருட்களெல்லாம்
வீட்டின் அந்தரத்தில்
கணினிக்குள், கைகளுக்குள்
வந்து விற்பதென்றாகிவிட்டது....!

அலைபேசியெல்லாம்
அங்காடிகள் என்றாகிவிட்டன....!
தவணை முறையே
தவமான வாழ்வு என்றாகிவிட்டது...!

கைக்கெட்டா தூரம்
என்பதெல்லாம் பொய்யாகி
கைவிரல் அழுத்தும் தூரம் என்றாகிவிட்டது...
கனவுகள் கூட
காணவேண்டாமல்
கனவுகளும் சேர்த்து
விற்பது என்பதாகிவிட்டது ....

தவணை முறையில்
நாமறியாமல் நமக்கே
கவலைகள் விற்பதும்,
நாமறியாமல் நாமே
கவலைகள் வாங்குவதும்
வாழ்வின் வழக்கம் என்றாகிவிட்டது...!

ஒரு இணையச் சொடுக்கில்
வீடு தேடி வந்து விடுகிறது
ஏறக்குறைய எல்லாமே...!
நம் வீடெங்கும்
நிறைந்து கிடக்கின்றன
கழிந்து போன
நம் கனவுகளின் எச்சங்கள்....!

கனவுகள் கண்டு …
கனவுகள் விற்று….
கவலைகள் வாங்கி ….
நம் வீடெங்கும் நிறைத்து வைத்திருக்கிறோம்…

இப்போதெல்லாம்
கையில் காசு ஏதும் இருக்கத் தேவையில்லை
பொருட்கள் கொண்ட
பெருவாழ்வு வாழ…..
நம்மை நாம் அடகு
வைத்தால்  மட்டும் போதும்….

---------------

## காவல் தெய்வம்

மிரட்டும் விழிகள்
முறுக்கிய மீசை
ஆயுதம் தரித்த கரங்கள் என
ஊர் எல்லையில் ரௌத்திரம் காட்டும்
கருப்பண்ணசாமி
எங்கள் ஊரின் காவல் தெய்வம்....

பலருக்கெல்லாம் பலத்த சந்தேகம்
குற்றங்கள் மலிந்து கிடக்கும் ஊரில்
எல்லை காவல் தெய்வம்
ஏனோ குற்றம் கடிவதில்லை என்று....

எல்லையிலேயே குடி கொண்ட
காவல் தெய்வம்
ஊரினுள் ஏனோ
காவல் காக்க வருவதில்லை என
எள்ளி நகைக்கும் சிலர்...

தலைமுறை மாறும்போது
இன்னும் கொஞ்சம் கூட்டுகிறார்
தன் விழிகளில் ரௌத்திரம் ...

மீசையை கூட்டி முறுக்குகிறார் ...
சாராயமும் மாமிசப்
படையலுக்கும் குறைவில்லை  ...
கருப்பண்ணசாமி
கதைகளுக்கும் பஞ்சமில்லை...
தாத்தாவிடம் கதை கேட்ட
தலைமுறை கடந்த பேரன்
மெல்ல கேட்டான் ...
'ஏன் அப்புச்சி..!
இன்னுமா நம்புற
கருப்பண்ணசாமியை....?!'

பேரனை மெல்ல
ஏற இறங்கப் பார்த்த
தாத்தா சொன்னார் ...
'கருப்பன கும்பிடும் போதே
இத்தனை குத்தம் ஊருக்குள்ள ...
அவன கும்பிடலன்னா என்னாகும் ?!'

---------

## கனவுகள் விற்கும் கம்யூனிசம்

கனவுத் தொழிற்சாலையில்
கோடிக்கணக்கான சம்பளம் வாங்கி
வெள்ளித்திரையில் கம்யூனிசம் பேசிய நடிகன்
ஐந்து நட்சத்திர விடுதியின்
மாடியிலிருந்து கையசைக்கிறான் .....

கீழிருந்து வெயிலிலும் வேர்வையிலும்
பதில் கையசைத்து ஆர்ப்பரிக்கும்
இரசிகர் பட்டாளம் ....

விலைமதிப்புள்ள அலைபேசி,
ஆடை அலங்காரம் தரித்து
இறக்குமதி செய்யப்பட்ட
சொகுசு காரில் வந்திறங்கி
மேடையில் கம்யூனிசக் கொள்கை
பேசும் அரசியல் பெரும்புள்ளிகள்
போலி கம்யூனிசக் கனவுகள் விற்கின்றனர்...

பகிர்வியல் தத்துவம் கொண்ட
பாரம்பரிய கம்யூனிசம்
ஒரு அருமையான வாழ்வியல்,
நாம் பழங்குடிகளாக இருந்த வரையில் ....

நாகரீக ஆழியில்
வர்த்தக அலைகளில்
அலைக்கழிந்து
ஆடம்பர வாழ்வியலாகியது
பகிர்வு வாழ்வியல் ....

ஒரு அழகான அருமையான
பகிர்வு வாழ்வியல் வேண்டுமெனில்
வாருங்கள் ..,
நாம் மீண்டும்
பழங்குடிகளாவோம்....

--------------------

## கல்லாகிய பகுத்தறிவு

பேரறியா ஒரு பெரும் சக்தி....
இவ்வுலகில் படைப்புகள் செய்தது,
பல்லாயிரம் ஆயிரம் ஆண்டுகள் முன்பு....!

அது தாவரங்களை படைத்தது,
அவை தமக்குள் பெயர் எதுவும்
வைத்துக் கொள்ளவில்லை....!

அது பறவைகளை படைத்தது,
அவை தமக்குள் பெயர் எதுவும்
வைத்துக் கொள்ளவில்லை....!

அது மிருகங்களை படைத்தது,
அவை தமக்குள் பெயர் எதுவும்
வைத்துக் கொள்ளவில்லை....!

அது மனிதர்களை படைத்தது,
ஆறறிவு கொண்ட
அவர்கள் தமக்குள் பெயர்
வைத்துக்கொண்டார்கள்...

அந்த பேரறியா சக்தி படைத்த
மற்ற எல்லாவற்றிற்கும்
பெயர் வைத்தார்கள், கூடவே
தம்மை படைத்த அந்த
பேரறியா சக்திக்கும் பெயரிட்டார்கள்
கடவுள் என்று ....
இறைவன் என்று ....
தெய்வம் என்று....

தாமே இவ்வுலகின் ஆறறிவு உடைய
மேன்மையான உயிரினம் என்பதால்
அக்கடவுளுக்கு
தம் உருவம் கொடுத்தனர்....
கல்லில் சிலை செய்தனர்...
வழிபட்டனர்.....

நாகரீக பரிணாமத்தின்
கால துன்பங்களில் தம் குலத்தை
காத்த தலைவனையும்
கடவுள் எனக் கருதி
சிலை வைத்து வழிபட்டனர்....

குலம் காத்த தலைவனின்
கதையை
பரம்பரை பரம்பரையாய்
பல்லாயிரம் ஆண்டுகளாக
உருவகங்கள் சேர்த்து
தொன்மக் கதைகளாய் கூறப்பட்டது...

பின்னாளில்,

பகுத்தறிவாளர்கள் என்று
தம்மை கூறிக்கொண்டு
மெய் பகுத்தறிவு என்னவென்று
அறியா ஒரு கூட்டம்
கடவுள் இல்லையென்று கூவிற்று...
சிலையை கல் என்று ஏளனம் செய்தது...
கடவுளை கேலிக் கூத்தாக்கியது...
போலி பகுத்தறிவு பேசியது....

இவ்வுலகில் மனிதனே பெரிதென்று
இறுமாப்பு கொண்டு
தலைக்குள் கர்வம் ஏறிய அக்கூட்டம்...
தம் தலைவருக்கு,
'கடவுள் சிலையில் கல் தானே உள்ளது
கடவுள் எங்கே?!' என்றவருக்கு
அதே கல்லால் சிலை வைத்தது...

கடவுள் மறுப்பு பேசிய தலைவரை
கடவுளாக்கி
பகுத்தறிவு பகலவன் என்று
உருவகப் பெயரிட்டு
தலை வணங்கி
மாலையிட்டு வழிபட்டது...

கடவுள் சிலையில் கடவுளைத் தேடி
கடவுள் இல்லை
கல் தான் உள்ளது என்று
போலி பகுத்தறிவு பேசியவரின்
கல் சிலையினுள்
நான் தேடல் கொள்கிறேன்
பகுத்தறிவு எங்கே என்று...?!
பகலவன் எங்கே என்று....?!

---------------

# தத்துவ வெளியிடை

## முதலாகிய முதல்

முதல் எப்போது முதலாகியிருக்கும் ...!?!
முதலாகியதை
நாம் முதலாக கண்டதுண்டோ...!?!

நம் வாழ்வின்
முதல் நட்பு,
முதல் நேசம்,
முதல் மொழி,
முதல் காட்சி,
ஏதேனும் ஞாபகம் உண்டா...!?!

ஒரு புதிய பருவத்தின்
முதல் பூ முகர்ந்ததுண்டோ ...!?!
முதல் கனி சுவைத்ததுண்டோ ... !?!
முதல் தென்றல் உணர்ந்ததுண்டோ.. !?!
முதல் மழை நனைந்ததுண்டோ ... !?!
யாரேனும்.... !?!

முதல் எப்போது முதலாகியிருக்கும் ...!?!
'முதல்'லை முதன்முதலில் முதலாக்கியது எது ..!?!
முதல் பெரிதென்று முதலில் யார் உரைத்தார் ..!?!
முதல் ஏன் முக்கியத்துவம் அடைகிறது...!?!

எல்லாவற்றிலும் முதலாக வேண்டுமென்று
எல்லோரும் ஏன் விரும்புகிறோம்..?!
மரணிப்பது தவிர்த்து...

பின்னோக்கி இருந்து பார்க்கையில்
கடைசியும் முதல் தானே....!?!

எது முதலாய் இருந்திருக்கும்
இப்பிரபஞ்சத்தில்....?!

இப்பிரபஞ்சம் தாண்டியும்
எது முதலாய் இருந்திருக்கும்.....!?!

-------------

## நானாகிய நீங்கள்

யாரோ என்னை அழைத்தார்கள் ...
மெல்ல நான் திரும்பிப்பார்த்தேன்...
அங்கு நான் நின்றிருந்தேன்...

நான் என்னை மீண்டும் அழைத்தேன்..
நான் அருகில் சென்று
என்னவென்று என்னிடம் கேட்டேன்...

நான் என்னைக் கொஞ்சம் உற்றுப்பாரென்றேன் ...
நான் என்னை உற்றுப் பார்க்க ஆரம்பித்தேன்...

அங்கு,
நான் எல்லாமுடையவனுமாயிருந்தேன்...
நான் ஏதுமில்லாதவனுமாயிருந்தேன்...

எல்லாவற்றிலும் நான் இருந்தேன்....
எல்லாவற்றையும் என்னுள் கொண்டிருந்தேன்...

யாரை விடவும் நான் உயர்ந்திருக்கவில்லை....
யாரை விடவும் நான் தாழ்ந்திருக்கவில்லை...

யாருக்கும் நான் அஞ்சாதவனாயிருந்தேன்,
என் கடமைகளைச் செவ்வனே செய்யும் வரையில்....
என்னைக்கண்டு யாரும் அஞ்சியிருக்கவில்லை...

யாரோடும் நான் போட்டியிடவில்லை...
என்னோடு யாரும் போட்டியிடவில்லை...
நான் என்னோடு மட்டுமே
போட்டியிட்டுக்கொண்டிருந்தேன் ....

தோற்றுப் போதும் நானாயிருந்தேன் ...
வெற்றிபெறுவதும் நானாயிருந்தேன்...

நான் எதுவாய்க் கொள்கிறோனே
அதுவாய் மட்டுமே நானிருந்தேன்....

அரசன் என்றால் அரசன்...
ஆண்டி என்றால் அரசன்...

அரசனென்று சொல்லி
ஆண்டியாயிருக்கவில்லை ...
ஆண்டியென்று சொல்லி
அரசனாயிருக்கவில்லை...

எல்லாவற்றையும்
நேசிப்பவனாயிருந்தேன்...
அன்பிற்கு மட்டுமே
கட்டுப்படுபவனாயிருந்தேன்...

நான் நானாக இருந்தேன்...
ஆனால் நான் நானாக இருக்கவில்லை ...
இங்கு ‘நான்’ என்பதில் நீங்களும் இருக்கிறீர்கள்...

---------------------

## ஒரு சனிக்கிழமை இரவு

முப்பது மில்லி மதுவும்,
நூற்றி ஐம்பது மில்லி நீரும் கொண்ட
ஒரு மதுக்கோப்பையின்
ஒவ்வொரு மிடறிலும் உதிக்கின்றன,
தோய்வுறா சிந்தனைகளில்
தோன்றிய கவிதை வார்த்தைகள்...

ஐனூற்றி நாற்பது மில்லி மிடறுகளில்
அறுபது நிமிடங்கள் கொண்ட
ஒரு கவிதை கோப்பையில் நிறையும்
வார்த்தைகளேனும் உண்டாயிருக்கவேண்டும்
ஒரு வார இறுதியில் மது அருந்தும்
ஒரு கவிஞனுக்கு...

ஒரு மிடறு மதுவில்
புதைந்திருக்கின்றன
ஓராயிரம் கவிதை சொற்கள் ....

கவிஞனின் சிந்தனைகள்
உச்சம் தொட்ட பொழுது
அம்மதுக்கோப்பையின்
கடைசித் துளி
காலியாகியிருந்தது...

-----------

## ஒரு கோப்பை ஓட்டுனர்

நேர்த்தியான ஒரு
மகிழ்வுந்துவின்
ஒரு சீரான ஓட்டுதலைப் போலானது
ஒரு கோப்பை மதுவின் மயக்கம்...

ஓட்டும் நேர்த்தி
அறிந்துவிட்டால் போதும்
ஓட்டுதலின்
அருமை பிடிபட்டுவிடும் ...
எப்படி ஓட்டவேண்டுமென்று...!
எங்கு நிறுத்தவேண்டுமென்று...!

----------------

# நேச வெளியிடை

## மழை வெளியிடை

காற்றின் தேரில்
வலம் வந்து சென்ற மழை
வெளியெங்கும்
ஈரம் பரப்பிச் சென்றிருந்தது.....!

நினைவின் தேரில்
வலம் வந்து சென்ற உன் முகம்
மனதெங்கும் உன்னை
பதித்துச் சென்றிருந்தது......!

என் சுவாசம் முழுதும்
நீ நிரம்பியிருந்தாய்.....!
உன்னுடைய கொஞ்சல் போல
விட்டு விட்டு பெய்யும்
சாரல் மழை ......!

மெய் குளிர்விக்கும்
மழையின் தூறல்கள்....!
உயிர் குளிர்விக்கும்
உன் உச்சரிப்புகள் .... !

மழைத்துளி ஊடுருவி
ஒளி பிரசிவிக்கும்
வானவில் ....!
உயிர் ஊடுருவி
உன் பார்வைகள் பிரசிவிக்கும்
நேசவில்...!
மழை நனைந்த சில்லென்ற
மெல்லிய காற்று,
மெல்ல மூச்சுக் காற்றில் கலந்து
இதயத்தினுள்
உன் நினைவுப் புயலை
உருவாக்கிச் சென்றது....!

ஆத்மாவின் ஆழத்திலிருந்து
ஆசுவதித்து ஏக்கத்துடன்
வெளியேறிய ஒரு
நீண்ட பெருமூச்சு
காற்றின் வெளியெங்கும்
உன் மீதான
என் நேசத்தை
எழுதிச் சென்றது ......!

----------------

## மௌனம் பேசும் மனம்

எதுவும் நடந்திருக்கவில்லை
நமக்குள் ....!
நீ என்னை நேசித்திருந்த போதும்,
நான் உன்னை நேசித்திருந்த போதும்....

ஒரு ஐந்து நிமிட தூரத்தை
பேசியோ.... பேசாமலோ... சேர்ந்தோ...
ஒரு முறை கூட கடந்ததில்லை
நாம் ....!

தனித்தே,
மௌனத்தின் மொழி மட்டுமே
பேசிக்கொண்டிருந்தன
நம் இதயங்கள்....!

உனக்காக ஜென்மம் நூற்கிறேன்
உன் விழிகள் உதிர்த்த
கண்ணீர்ப் பூக்கள் கொண்டு....

உள்ளார்ந்த நேசம் எப்போதும்
உதிர்ந்து போவதில்லை...
உயிரின் உள்ளே
உறைந்திருக்கும் அது...
எப்பொழுதும், வாழ்நாள் முழுதும்...
மரணிக்கும் தருணம்
உயிரோடு உருகி,
ஆன்மாவோடு  காற்றில் கலக்கும் ....

நிழல் போல நின்னில் சேர
விழைகிறேன் நான்...
நம்மைப் பிரித்தது
எதுவாயிருக்கும் என்று
தேடிப்பார்க்கிறேன் ...
நம் நேசமேயன்றி வேறு எதுவுமில்லை...!

பெயர் அறியா ஒரு வலியை
காதல் என்று யாரோ
பெயரிட்டிருந்தார்கள்.....!
காதலெனும் அத்தியாயம்
கடக்காமல்
கழிந்திருக்கப்போவதில்லை
எவருடைய வாழ்வும்.....!

----------------

## விழியிரண்டால்...!

நாள் முழுதும் நடந்து கடந்த
‘பொழுது’ அயர்ந்து
இரவாகிப் போனது ....!

நாள் முழுதும் வீசிய
காற்று நலிந்து மெலிந்து போனது.....!

நடு யாமம் கூட கழிந்து
நேரமாகியிருந்தது .....!

நாள் முழுதும் ஊறிய உன்
நினைவுகளில்
நேசம் ஊற்றெடுத்து
நில்லாமல் ஓடுகிறது ......!

உன் பார்வையால்
உயிர் உரிக்கிறாய்....!

உன் விழியெங்கும்
புதைத்து வைத்திருக்கிறாய்,
ஆயிரம் மின்னல்கள் ......!

என் மனமெங்கும்
விதைத்துச் செல்கிறாய்,
கோடி கனவுகள் ....!

வான் அடர்ந்த கரு முகில்களுக்கு
சிறகுகள் கொடை அளிக்கும்
மின்னல்கள் ......!

என் படர்ந்த கனவுகளுக்கு
சிறகுகள் கொடை அளிக்கும்
உன் விழிகள் ....!

கனவுகள் துரத்தும்
வான் வெளியெங்கும்
தேடல் கொள்கிறேன்,
வானவில் வரைந்த
உன் விழிகளை ......!

-------------------

## மொழிப் பிரள்ச்சி

நான் கூறும் மொழி
நீ அறியவில்லையோ என் தோழி ...

உன் வாய்மொழி கேட்டேன்
மௌனம் தந்தாய்...

நேசம் கேட்டேன்
கோபம் தந்தாய்...

கூடல் கேட்டேன்
ஊடல் தந்தாய்...

தோழமை கேட்டேன்
பகைமை தந்தாய்...

தொடுதல் கேட்டேன்
சுடுசொல் தந்தாய்...

கொஞ்சல் கேட்டேன்
கொடுஞ்சொல் தந்தாய்...

நெருக்கம் கேட்டேன்
தர்க்கம் தந்தாய்...

நான் கூறும் மொழி
நீ அறியவில்லையோ என் தோழி ...

எதை நான் கேட்டால்
கேட்டது தருவாய் ....

----------------



ம.கிருஷ்ணகுமார், திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி என்ற ஊரில் 1972 ம் ஆண்டு பிறந்தவர். துணி பதனிடும் துறையில் பட்டயமும், ஆடை வடிவமைப்பு துறையில் இளநிலை பட்டமும், ஆடை மேலாண்மை துறையில் முதுநிலை பட்டமும், மேலாண்மை துறையில் முனைவர் பட்டமும் பெற்றவர். 28 ஆண்டுகள் ஆடை தொழில்துறையிலும் மற்றும் கல்லூரி பேராசியராகவும் அனுபவம் பெற்றவர். இந்தோனேசியாவில் சுமார் 7 வருடங்கள் பணிபுரிந்தவர். ஈரோட்டில் 30 வருடங்களாக வசித்து வந்தவர். கேராளவில் கண்ணூரில் உள்ள தேசிய ஆடை புனைவியில் கல்லூரியில் (National Institute of Fashion Technology) பேராசியராக பணியாற்றுகிறார். ஆடை மேலாண்மை துறையில் இரு புத்தகங்கள் எழுதியுள்ளார். தமிழ் கவிதை நூல் ஒன்று எழுதி சுயமாக பதிப்பித்துள்ளார். இது இவரின் இரண்டாவது கவிதை நூலாகும். இவரின் முதல் ஆய்வு நூல் ‘குமரிக்கண்டமும், தொல்திராவிடமும், ஆரியமும்’ என்ற நூலாகும் (டிஸ்கவரி பப்ளிகேசன்ஸ், சென்னை). இரண்டாம் ஆய்வு நூல் ‘பல்லவர்கள் மூதாதையர் மரபு’ என்ற நூலாகும் (சுய பதிப்பு). இவரின் மூன்றாவது ஆய்வு நூலாக ‘அரியும் சிவனும் ஒன்று’ என்ற நூல் எழுதி முடித்துள்ளார். தற்போது கேரளாவில் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார்.

